2020 மார்ச் 18]

123—

கட்டடம்

***35959—திரு. அ. நடராஜன்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, எம். புதுப்பாளையம் கிராமத்தில் உள்ள மகளிர் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், எம். புதுப்பாளையம் கிராமத்திலுள்ள மகளிர் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமாக அடிமனை ஏதும் இல்லாத காரணத்தினால் புதிய கட்டடம் கட்ட தற்சமயம் சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன் அவர்கள்.

திரு. அ. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘மக்களால் நான், மக்களுக்காகவே நான்’ என்கின்ற தாரக மந்திரத்தோடு நல்லாட்சி நடத்தி, பால் வளத் துறையிலே வெண்மைப் புரட்சியினை ஏற்படுத்திய, மறைந்தும் மறையாமல் மக்கள் மனதில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். அம்மா அவர்களின் வழியிலே தமிழகத்தில் பால் உற்பத்தியினைப் பெருக்குவதற்காகவும், கால்நடைகளினுடைய தரத்தை உயர்த்துவதற்காகவும், வெளிநாட்டினுடைய தொழில்நுட்பங்களை அறிந்து, ஆசிய கண்டத்திலேயே தமிழகத்தில் சேலம், தலைவாசலில் ஆயிரம் கோடி ரூபாயில் கால்நடை பூங்காவினை அமைத்த குடிமராமத்து நாயகன், உழவு செய்கின்ற உழவர் திருமகன், அண்ணன் எடப்பாடியார்

அவர்களையும், அவருக்கு உற்ற துணையாக இருக்கின்ற துணை முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன். கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களையும் வணங்கி, மாண்புமிகு பேரவைத் தலைவராகிய தங்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டம், பல்லடம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட எம். புதுப்பாளையம் என்பது திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியாக இருந்தாலும், அங்கு மகளிரால் நடத்தப்படும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் 130 பால் உற்பத்தியாளர்கள் உள்ளனர். அந்தப் பகுதியைச் சுற்றி கரைப்புதூர், உகாயனூர், தொங்குட்டிபாளையம் ஆகிய ஊராட்சிப் பகுதிகள் உள்ளன. அங்கு விவசாயிகள் அதிகம் உள்ள காரணத்தினாலே விவசாயிகளுடைய நலன் காக்கின்ற அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள், எங்களுடைய எம். புதுப்பாளையம் கிராமத்திலே இருக்கின்ற மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு அரசு மூலமாக ஒரு சொந்தக் கட்டடம் கட்டித்தர வேண்டுமாறு தங்களை அன்போடு கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டம், பல்லடம் சட்டமன்றத் தொகுதி, பல்லடம் ஊராட்சி ஒன்றியம், எம். புதுப்பாளையம் கிராமத்தில் உள்ள CPT 745 மகளிர் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கமானது 18–1–2010 முதல் செயல்பட்டு வருகின்றது. இச்சங்கம் தனியார் வாடகைக் கட்டடத்தில் மாதம் ஒன்றுக்கு ரூ.1,700/– வாடகையில் இயங்கி வருகின்றது. இச்சங்கத்தில் தற்போது உள்ள உறுப்பினர்களிடமிருந்து நாள் ஒன்றுக்கு சராசரியாக 700 லிட்டர் பால் கொள்முதல் செய்து உள்ளூர் விற்பனையாக 60 லிட்டர் போக, மீதமுள்ள 640 லிட்டர் பால் திருப்பூர் மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்திற்கு அனுப்பப்பட்டு வருகின்றது. இச்சங்கத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ஏதுவாக சொந்தமாக காலி மனையோ, நிலமோ இல்லை. இச்சங்கத்தில் 2017–2018 ஆம் ஆண்டின் இறுதித் தணிக்கையின்படி 13,306 ரூபாய் மட்டுமே கட்டட நிதியாக உள்ளது. மேலும், இச்சங்கம் 1,85,110 ரூபாய் இலாபத்தில் செயல்பட்டு வருகின்றது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க,

2020 மார்ச் 18]

மாவட்ட நிருவாகத்திடமிருந்து CPT 745 எம். புதுப்பாளையம் மகளிர் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட நிலம் பெற்றுத் தரும்பட்சத்தில், பால் வளத் துறையின் சார்பாக சொந்தக் கட்டடம் கட்டித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன் அவர்கள்.

திரு. அ. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட நிருவாகத்தின் மூலமாக இடம் பெற்றுத் தந்தால் சொந்தக் கட்டடம் கட்டித் தர ஆவன செய்யப்படும் என்று அறிவித்திருக்கின்றார்கள். அதற்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அந்தப் பகுதியிலேயே பொல்லிக்காளிபாளையம் கிராமத்தில் நத்தம் புறம்போக்கு இடம் உள்ளது. மாவட்ட நிருவாகத்தின் மூலமாக நாங்கள் அந்த இடத்தைப் பெற்றுத் தருகின்றோம். இந்த ஆண்டே சொந்தக் கட்டடம் கட்டித் தருவதற்கு ஆவன செய்ய வேண்டும். அதைப்போல பல்லடம் தொகுதிக்குட்பட்ட மல்லகவுண்டன்பாளையம் கிராமத்தில் செயல்பட்டு வருகின்ற பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு, அந்தக் கூட்டுறவுச் சங்கத்தின் பெயரிலேயே 5¼ சென்ட் இடம் பத்திரப் பதிவு செய்யப்பட்டு அந்தப் பத்திரத்தின் நகலானது கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அவர்களிடத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆகவே, மல்லகவுண்டன்பாளையம் கிராமத்தில் செயல்பட்டு வரும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கும் சொந்தக் கட்டடம் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்த இரண்டு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் இடம் கொடுக்கின்றபட்சத்தில், உறுதியாக இந்த நிதியாண்டிலேயே அதற்குத் தேவையான பணத்தை இணையத்தின்

மூலமாக ஒதுக்கி சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 124, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

124—

தொழிற்பேட்டை

***53291—திரு. வி. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதி, ஜமுனாமரத்தூர் ஒன்றியத்தில் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்) தலைமை]

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதி, ஜமுனாமரத்தூர் ஒன்றியத்தில் தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம் அவர்கள்.

திரு. வி. பன்னீர்செல்வம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 'தமிழ்' மூன்றெழுத்து; 'அண்ணா' மூன்றெழுத்து; 'M.G.R.' மூன்றெழுத்து; 'நட்பு' மூன்றெழுத்து; 'கருணை' மூன்றெழுத்து; 'நன்றி' மூன்றெழுத்து; இவற்றிற்கெல்லாம் வடிவாகத் திகழ்ந்த 'அம்மா' என்னும் அற்புதச் சொல் மூன்றெழுத்து. தாயே, நீங்கள் கண் மூடி உறங்கும் வங்கக் கடலோரம் எங்கள் கண்ணீர்த் துளிகளை காணிக்கையாக்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)